பயணிகளின்
கோரிக்கையை ஏற்று

# மெட்ரோ ரெயில் இயக்கப்படும் நேரம் நீட்டிப்பு

சென்னை, நவ.8–
சென்னை மெட்ரோ ரெயில் சேவைகள் தினசரி காலை 7 மணியில் இருந்து இரவு 9 மணி வரை இயக்கப்படுகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு பயணிகளின் கோரிக்கையை ஏற்று இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் தினசரி காலை 5½ மணி முதல் இரவு 11 மணி வரை மெட்ரோ ரெயில் சேவை நேரம் நீட்டிக்கப்படுகிறது. அலுவலக நேரங்களில் 7 நிமிட இடைவெளியிலும், மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் மெட்ரோ ரெயில் சேவைகள் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை அலுவலக நேரம் இல்லாமல் இயக்கப்படும்.

மேற்கண்ட தகவலை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.